**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.278/19**
**வழக்கு சாட்சி – அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குபேந்திரன் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 06.04.23

**( 2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.))**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் பள்ளபட்டி என்ற மேலப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆடு மேய்க்கும் வேலை செய்துவருகிறேன். 15.1.19 ம் தேதியன்று நான் கொடுவிலார்பட்டிக்கு வீட்டிற்கு சமான் வாங்குவதற்காக சென்றேன். அப்போது சாயங்காலம் 8 மணி இருக்கும். அப்போது கொடுவிலார்பட்டி பஞ்சாயத்து போர்டு ஆபிஸ் முன்பாக நிறையபேர் இருந்தார்கள். அதில் இரண்டு பேர் ஒருவர் பெயர் பாண்டி மற்றொரு பெயர் ஞாபகம் இல்லை. அவர்கள் பள்ளபட்டிகாரர்கள் யார் வந்தாலும் அடிப்போம் என்று அசிங்கமாக பேசினார்கள். இப்படி ஏன் அசிங்கமாக பேசுகிறிர்கள் என்று கேட்டதற்கு கம்பால் பாண்டி என்னை தலையின் வலது பக்கம் அடித்துவிட்டார். மற்றொரு பையன் வலது பக்க முதுகில் அடித்துவிட்டார். அதில் எனக்கு தலை உடைந்து காயமானது. என் தம்பி ரஞ்சித்குமார் அங்கு இருந்தவர் வழிபோக்குஆட்டோவில் ஏற்ற க.விலக்கு மருத்துவமனையில் சேர்த்தார். அங்கு பிசிபட்டி காவல்நிலையத்திலிருந்து வந்து புகார் பெற்று சென்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.